## ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவகம் - 2014

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 107(5) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னாள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கமைய நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் - 07**

முழுமையாகப் பெறுமானத் தேய்விடப்பட்ட ரூபா 2,049,239 கிரயமான சொத்துக்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டிருக்கின்ற போதிலும் நியாயப் பெறுமதியைக் காண்பிப்பதற்காக மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறாகும்.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 2011 யூலை 12 ஆந் திகதிய 959 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் IV ஆம் பந்தி | தகுதிகாண் காலத்தில் இருக்கின்ற சிரேஷ்ட விரிவுரையாளரொருவருக்கு 3 வருட வெளிநாட்டு விடுமுறை வழங்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2011 சனவரி 27 ஆந் திகதிய PED 56 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு திறைசேரி அங்கீகாரமின்றி ரூபா 11,890,966 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தது. |
| (இ) | பல்கலைக்கழக மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவையின் XX ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் பிரிவு | பல்கலைக்கழகத்தின் கல்விசார் பதவியணியினரின் வருகை மற்றும் வெளியேறுகைகள் உறுதிப்படுத்தப்படாமல் மீளாய்வாண்டில் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 6,162,479 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 2,400,723 மிகையாக இருந்ததுடன் அதற்கு உடனொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 3,413,496 ஆனமையால் நிதி விளைவுகள் ரூபா 1,012,773 இனால் வீழ்ச்சியடைந்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ஆளணி வேதனங்கள் ரூபா 2,131,924 இனால் அதிகரித்தமை இதற்கான பிரதான காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது பட்டத் தகைமைகளைப் பூர்த்திசெய்த மாணவர்களின் எண்ணிக்கை 05 முதல் 04 வரை குறைவடைந்திருந்ததுடன் ஒட்டுமொத்த வருமானம் 10.58 சதவீதத்தினால் அதிகரித்திருக்கும் போது ஒட்டுமொத்த செலவினம் 22.97 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

### 4.2 நிதியத்தின் குறைந்த பயன்பாடு

நிறுவகத்தின் மூலதனச் செலவினத்திற்காக திறைசேரியிலிருந்து கிடைத்த பணம் பயன்படுத்தப்படாது சேமிக்கப்பட்ட மானியங்கள் கவனத்தில் கொள்ளப்படாது திரும்பத்திரும்ப விண்ணப்பித்து மூலதனச் செலவினத்திற்காக நிதி பெறப்பட்டமையினால் 2013 ஆம் ஆண்டிலும் மீளாய்வாண்டின் இறுதியிலும் முறையே ரூபா 3,225,092 தொகை மற்றும் ரூபா 8,216,882 தொகையான மூலதன மானியம் பயன்படுத்தப்படாது சேமிக்கப்பட்டிருந்தது.

### 4.3 இனங்காணப்பட்ட நட்டம்

நிதிப்பிரமாணம் 676(2) இன் படி அறிவித்தல்களைப் பிரசுரிக்கும் போது மும்மொழிகளிலும் ஒரு மொழியில் ஒரு அறிவித்தல் மாத்திரம் பிரசுரிக்கப்பட வேண்டிய போதிலும் ஒரே அறிவித்தல் ஒரு மொழியில் இரண்டு செய்திப் பத்திரிகைகளில் பிரசுரிப்பதற்காக ரூபா 194,656 தொகை செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறே அரசாங்கத்திற்குரிய பத்திரிகைக் கம்பனியொன்று காணப்படும் போது தனியார் கம்பனிகளிலும் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

### 4.4 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடு

புதிய கட்டிட நிர்மாண ஒப்பந்தம் ரூபா 76 மில்லியனுக்கு மதிப்பிடப்பட்டு தனியார் கம்பனியொன்றுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன், அவ்வாறு ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் ஒப்பந்தப் பெறுமதி, பூரணப்படுத்த வேண்டிய கால எல்லை, தாமதக் கட்டணம் மற்றும் நிறுத்தி வைத்தல்களை விடுவிப்புச் செய்யும் முறைகள் போன்ற ஒப்பந்தங்களுக்குரிய முக்கியமான நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 05. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட வருமானம் மற்றும் செலவினங்களை உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினங்களுடன் ஒப்பீடு செய்த போது பொருண்மையான முரண்களைக் காணக்கூடியதாகவிருந்தது. அதன்படி பாதீடு ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகப் பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பதவியணியினர் நிர்வாகம்
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வெளிநாட்டுப் புலமைப்பரிசில்
(ஈ) காசும் வங்கியும்